# MANAGING THE DELINGNQUENT BEHAVIORS OF STUDENTS IN THE CLASSROOM
## (A Study base on selected schools in Karaveddy Educational division of the Vadamaradchy zone, Jaffna)

## வகுப்பறையில் மாணவர்களின் பிறழ்நடத்தைகளை முகாமைசெய்தல் (யாழ்ப்பாணம் வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள கரவெட்டிக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**[1]A. Paunanthie, [2]J. Rasanayagam**
[1]Kopay Teachers' College
[2]Department of Education, University of Jaffna
nanthie@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

மாணவர்களில் பல்வேறு ஆளுமைப் பண்புடையவர்களாக உள்ள அதேவேளை அவர்கள் தனியாள் வேறுபாடுகளை உடையவர்களாகவும் உள்ளனர். அவர்கள் பல்வேறு சூழலிலிருந்து வேறுபட்ட குடும்பப் பின்னணியிலிருந்து பாடசாலைக்கு வருகின்றார்கள். அவர்கள் வகுப்பறையில் பல்வேறு நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்துவதை அவதானிக்கலாம். அவர்களுடைய வயது வேறுபாட்டுக்கு ஏற்ப அவர்களின் நடத்தையின் போக்கிலும் மாற்றங்கள் காணப்படுவதை அவதானிக்கலாம். குறிப்பாக இடைநிலை வகுப்பு மாணவர்கள் பதின்ம வயதினராகவும் (teenage) உள்ளமையால் அவர்கள் பிறரது கவனத்தைத் தம்பக்கம் ஈர்ப்பதில் அக்கறை காட்டுவர். உளவியலாளர்கள் இவ்வயதுப் பிரிவினர் பற்றித் தனிக்கவனம் செலுத்தியுள்ளனர். ‘‘சமூக நிலவரங்கள் மற்றும் குடும்ப நிலவரங்கள் ஆகியனவே மாணவரின் பிறழ்வு நடத்தைகளுக்கு அடிப்படைக் காரணிகள் ஆகின்றன. இக்காரணிகளே கற்றலில் மாணவர்கள் முழுமையாக ஈடுபடமுடியாத தவிப்பு நிலையை ஏற்படுத்துகின்றன. இந்நிலையில் மாணவர்கள் பிறழ்வு நடத்தைகளைக் காட்டும்போது அவற்றை ஆசிரியர்கள் வினைத்திறனோடு முகாமைசெய்து வழிப்படுத்த வேண்டிய தேவை அவசியமாகின்றது. இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வடமராட்சிக் கல்வி வலயத்தின் கரவெட்டி கோட்ட பாடசாலைகளில் இடைநிலை வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறையில் மாணவர்களின் பிறழ்நடத்தைகளை முகாமை செய்தல் என்னும் தலைப்பின் கீழ் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. வகுப்பறை முகாமைத்துவச் செயற்பாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக அவர்களது பிறழ் நடத்தைகளை முகாமை செய்தலும் அமைகின்றது. கரவெட்டி கல்விக் கோட்டத்தில் 31 பாடசாலைகள் இயங்குகின்றன. அவற்றில் 16 பாடசாலைகள் இடைநிலைப் பாடசாலைகளாக உள்ளன. இப்பாடசாலைகளில் தரம் 9 – 11 வரையான இடைநிலை வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டே ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. உரத்துக் கத்துதல், கற்பித்துக்கொண்டிருக்கும்போது கதைத்தல், பொருட்களை வீசுதல், கரும்பலகைகளில் வேண்டாத விடயங்களை எழுதுதல், தேவையற்றுக் கதைத்தல்,நேரம் தாழ்த்தி வகுப்பறைக்கு வருதல், கற்றல் மேலதிக செயற்பாடுகளை வீடுகளில் நிறைவேற்றாது வருதல், வன் நடத்தைகள், பொய் உரைத்தல், எதிர்ப்பாலாரோடு முரண்படுதல், பிறரது பொருட்களை எடுத்தல், பாடசாலைச் சொத்துக்களை நாசம்செய்தல், தூங்குதல் போன்ற பலவகையான நடத்தைப் பிறழ்வுகளை அவர்கள் வகுப்பறைகளில் வெளிக்காட்டுகின்றனர். இப்பிரச்சினைகளை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். குடும்பம், சமூகம், பாடசாலை, மாணவர் சார்ந்து அவர்களது பிறழ்நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது. பிறழ்நடத்தைக்கான பின்னணிகள், பிறழ் நடத்தையின் வெளிப்பாடுகள், பிறழ் நடத்தைகளை முகாமை செய்வதில் ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்கள், அச்சவால்களை வெற்றி கொள்வதற்கு அவர்கள் கையாளக்கூடிய நுட்பங்கள் பற்றி இந்த ஆய்வில் நோக்கப்படுகின்றது.

***பிரதான சொற்பதங்கள்:*** *இடைநிலை வகுப்பு, பிறழ்நடத்தைகள், மாணவர்கள், முகாமைசெய்தல், வகுப்பறை*

**அறிமுகம்**

பாடசாலைகளில் முறையான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறும் இடங்களில் வகுப்பறைகள் முக்கியமானவை. அந்த வகையில் வகுப்பறையில் கற்றல் நிகழக்கூடிய சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது கற்பிக்கும் ஆசிரியரின் முக்கிய பணியாகும். அதற்குப் பொருத்தமாக வகுப்பறையை முகாமைசெய்தல் ஆசிரியரின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஒரு வகுப்பறையிலுள்ள ஒவ்வொரு மாணவர்களும் தனியாள் வேறுபாடுகளை உடையவர்கள். எனவே அவர்கள் வெவ்வேறான நடத்தைக் கோலத்தை வெளிப்படுத்துவர். மாணவர்கள் சிலர் வகுப்பறைகளில் நடத்தை பிறழ்வுகளை வெளிப்படுத்துவர். அந்நேரத்தில் ஆசிரியர் மிக அவதானமாக மாணவர்களை அணுகி வழிநடத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. தொடர்ச்சியாக மாணவர்கள் நடத்தைப் பிறழ்வுகளை வெளிக்காட்டுவார்களாயின் அந்நிலைமை வகுப்பறையின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கே குந்தகமாக அமைந்துவிடும். ''மாணவர்கள் தவறான நடத்தைகளுடன் பிறப்பதில்லை. அவர்கள் உடல், உள, சமூக விருத்தியுடன் நடத்தைப் பிரச்சினைகளையும் காலக்கிரமத்தில் பெற்றுக்கொள்கின்றார்கள்'' (பக்கீர் ஜ∴பார், 2009). எனவே மாணவர்களது நடத்தைப் பிறழ்வுகளுக்கு அவர்களைச் சூழ்ந்துள்ள சமூகமும் காரணமாக அமைந்துள்ளது. நடத்தைப் பிறழ்வுடைய பிள்ளைகளை கோபத்தோடு நோக்குவதைவிட அக்கறையோடு நோக்குவதே பயனுடையதாகும். அவர்கள் வகுப்பறையில் நடத்தைப் பிறழ்வுகளை வெளிக்காட்டுவது ஆசிரியருக்கு மட்டுமின்றி ஏனைய மாணவர்களுக்கும் அது சிக்கலானதாகவே அமையும். எனவே பொருத்தமான நுட்பங்களைக் கையாண்டு அவற்றை முகாமை செய்வது ஆசிரியரின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது. குறிப்பாக இடைநிலை வகுப்புக்களில் தரம் 9 – 11 வரையான மாணவர்கள் பதின்ம வயதின் நடுப்பகுதியில் உள்ளவர்கள் என்பதால் அவர்களிடத்தில் உடல், உள மாற்றங்கள் பல நிகழும். இப்பருவப் பிள்ளைகளைப் பொருத்தமாகக் கையாள வேண்டிய பொறுப்பின் பெரும்பகுதி அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே, வகுப்பறையில் மாணவர்களின் பிறழ் நடத்தைகளை முகாமை செய்தல் என்னும் தலைப்பில் இடைநிலைப் பிரிவில் தரம் 9 – 11 வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பின்னணி**

ஆசிரியர்கள் வகுப்பறைகளை முகாமை செய்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. அவற்றுள் மாணவர்களின் பிறழ்நடத்தைகளை முகாமை செய்தல் சவால் நிறைந்ததாகும். குறிப்பாக 9 – 11 வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் கட்டிளமைப் பருவத்தவர்களாகக் காணப்படுகின்றமையால் ஏனைய வயதுப் பிரிவினரைக் காட்டிலும் அவர்கள் காட்டும் பிறழ் நடத்தைகளின் தாக்கம் அதிகமாக அமையும். அண்மைக் காலமாக ஊடகங்களை நோக்குகின்றபோது பிள்ளைகளின் பிறழ்நடத்தைகளை முகாமை செய்ய முடியாது ஆசிரியர்கள் மனவெழுச்சிக்கு (Emotion) உட்படுவதையும் அவதானிக்கலாம். இதன் பாதிப்புக்கள் மாணவர்களுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் குந்தகமாக அமைந்து விடுகின்றன. எனவே, ஆசிரியர்கள் வகுப்பறைகளில் மாணவர்களின் பிறழ் நடத்தைகளை வெற்றிகரமாக

முகாமைசெய்து அவர்களது கற்றலை மேம்படுத்த வேண்டியதாக உள்ளது. இந்நிலையில் இந்தத் தலைப்பின் கீழ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

இடைநிலை வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களது பிறழ் நடத்தையில் பாடசாலை, மாணவரின், குடும்பம், சமூகம் சார்ந்து பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதால் அவற்றை முகாமைசெய்வதில் ஆசிரியர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வுக்கான நியாயப்பாடு**

பாடசாலைகளில் வகுப்பறைகள் வினைத்திறனுடைய வகையில் செயற்படுகின்றபோதுதான் அவற்றின் அடைவிலும் எதிர்பார்க்கப்படுகின்ற இலக்கை எட்ட முடியும். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அனைத்து மாணவர்களது கவனத்தைக் குவியப்படுத்தி வகுப்பறையை முகாமை செய்யும்போதே ஆசிரியர் தனது இலக்கை எட்ட முடியும். ஆனால், இவற்றையும் தாண்டி வகுப்பறையை முகாமை செய்வதில் ஆசிரியர் பல சவால்களை எதிர்கொள்கின்றார். மாணவர்கள் வகுப்பறையில் பிறழ்நடத்தைகளை வெளிப்படுத்துகின்றபோது ஆசிரியர் அவற்றை முகாமை செய்வதில் சவால்களைச் சந்திக்கின்றார். குறிப்பாக 9 – 11 வரையான வகுப்பு மாணவர்களின் பிறழ்நடத்தைகளை முகாமை செய்தல் சவால்மிக்க பணியாகும். எனவே, வகுப்பறையில் மாணவர்களின் பிறழ் நடத்தைகளை முகாமை செய்தல் என்னும் தலைப்பின் கீழ் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. அதுமட்டுமின்றி இந்த ஆய்வுப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்விடயம் பற்றி இதுவரை எவரும் ஆய்வு செய்ததாகவும் அறியப்படவில்லை. இந்நிலையிலும் இந்த ஆய்வு அவசியமாகின்றது.

**ஆய்வுக் குறிக்கோள்**

- மாணவர்கள் வகுப்பறையில் வெளிப்படுத்தும் பிறழ் நடத்தைகளை இனங்காணல்.
- அவற்றை முகாமைசெய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல்.
- சவால்களை வெற்றிகொள்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

**ஆய்வு வினாக்கள்**

- மாணவர்கள் வகுப்பறையில் வெளிப்படுத்தும் பிறழ் நடத்தைகள் எவை?
- அவற்றை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சாவல்கள் எவை?
- அச்சவால்களை வெற்றிகொள்வதற்கான வழிமுறைகள் எவை?

**ஆய்வு முறையியல்**


இந்த ஆய்வானது பண்புநிலை ஆய்வுமுறையினூடாக (Quantitative) முன்னெடுக்கப்படுகின்றது. இது ஒரு அளவைநிலை (Survey research) ஆய்வாகும். கரவெட்டி கல்விக்கோட்டத்தில் 9 - 11 வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கான முதனிலைத் தரவுகள் அந்த வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

**ஆய்வுப்பிரதேசமும் மாதிரியெடுத்தலும்**
யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து கல்வி வயலங்கள் உள்ளன. அவற்றில் வடமராட்சிக் கல்வி வலயமும் ஒன்று. வடமராட்சி கல்வி வலயத்தில் மூன்று கல்விக் கோட்டங்கள் உள்ளன. அவற்றில் கரவெட்டிக் கல்விக் கோட்டமும் ஒன்று. கரவெட்டிக் கல்விக் கோட்டத்தில் 31 பாடசாலைகள் இயங்குகின்றன. அங்கு 16 பாடசாலைகளில் 9-11 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அந்த வகுப்புக்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் பால், வயது, பாடம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 5 ஆசிரியர்கள் வீதம் 80 ஆசிரியர்கள் எழுமாற்று மாதிரிகளாக (Random Sampling) தெரிவுசெய்யப்படுகின்றனர்.

**தரவு சேகரிப்புக் கருவிகள்**
இந்த ஆய்வுக்கான தரவு சேகரிப்புக் கருவிகளாகப் பின்வருவன பயன்படுத்தப்படுகின்றன

- வினாக்கொத்து
- நேர்காணல் (அரைக்கட்டமைப்பு)
- அவதானிப்பு


**எண்ணக்கருச் சட்டகம்**




**தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**
தரவு சேகரிப்புக் கருவிகள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் தரவுகளாக்கப்பட்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகள் மூலம் வியாக்கியானமளிக்கப்படுகின்றன.
கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளில் இடைநிலை வகுப்புக்களில் மாணவர்கள் பிறழ்நடத்தைகளை வெளிப்படுத்துகின்றார்கள் என்பதையும் அவர்களை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் இடர்படுகின்றார்கள் என்பதையும் ஆய்வாளரின் நேரடி அவதானிப்பின் மூலம் உணர்ந்துகொள்ள முடிந்தது. இதன்படி ஆசிரியர்கள் 80 பேரிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இதன்படி மாணவர்கள் வகுபறைகளில் பிறழ் நடத்தைகளை வெளிப்படுத்துவது தொடர்பாக


வினாவுக்கு அவர்களது தெரிவுகள் எவ்வாறு காணப்பட்டன என்பதை வரைபு 1 காட்டுகின்றது.

வரைபு 1




இதன்படி 31% ஆனவர்கள் மட்டுமே மாணவர்கள் பிறழ்நடத்தையுடையவர்கள் என்பதை குறைவாக அல்லது மிகக் குறைவாக ஏற்றுக் கொள்கின்றனர். எனவே, மாணவர்களிடத்தில் பிறழ்நடத்தை காணப்படுகின்றது என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. இந்நிலையில் வகுப்பறையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் இலக்குகளை அடையத்தக்க வகையில் ஆசிரியர் வகுப்பறையை முகாமை செய்ய வேண்டியது அவசியமாகின்றது. மாணவர்களின் ஒத்துழைப்பின்றி வகுப்பறையை வினைத்திறனுடையதாக முகாமை செய்தல் சாத்தியமன்று. எனவே, வகுப்பறையில் அவர்களின் பிறழ் நடத்தைகளை முகாமை செய்தல் என்பது ஆசிரியர்களுக்குச் சவால் நிறைந்ததாக அமைந்துவிடுகின்றது. வகுப்பறைகளில் மாணவர்களது பிறழ்நடத்தைகளை முகாமைசெய்தல் பற்றி ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட வினாவுக்கு அவர்களின் தெரிவுகள் எவ்வாறு அமைந்தன என்பதை வரைபு 2 காட்டுகின்றது.

வரைபு 2





இதன்படி 64% ஆன ஆசிரியர்கள் பிறழ்நடத்தைகளை முகாமை செய்வதில் சராசரி அளவுக்கு மேலான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது தெளிவாகின்றது. ஒப்பீட்டளவில் ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும் பெண் ஆசிரியர்களே அதிக சவால்களை எதிர்கொள்வதாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இணையவழிக் கல்வி பற்றிய பரிந்துரைகள் நமது நாட்டில் அதிகரித்து வருகின்றன. கல்வியமைச்சும் அதற்கான வசதிகளைத் தனது

இணையத்தளத்தினூடாக ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால், தரம் 9 – 11 வரையான மாணவர்கள், கற்றல் தேவைகளுக்காக மட்டுமின்றி பொழுதுபோக்குச் செயற்பாடுகளுக்காகவும் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். அவர்களுட் சிலர் இணைய வசதியுடைய அலைபேசிகளைக் கையாள்வதாகவும் ஆசிரியர்களுடனான கலந்துரையாடலின் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. அலைபேசிப் பாவனை மற்றும் இணையப் பாவனை மாணவர்களிடத்தில் பிறழ் நடத்தையை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பான வினாவுக்கு ஆசிரியர்கள் தெரியப்படுத்திய தெரிவுகள் பற்றி வரைபு 3 காட்டுகின்றது.

வரைபு 3





இங்கு 69% ஆனவர்கள் மாணவர்களிடத்தில் அலைபேசி, இணையப் பாவனை காணப்படுகின்றன என்பதையும் அவை மாணவர்களது பிறழ் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதையும் வெளிப்படுத்தியிருந்தனர். இவற்றோடு சேர்த்து தொலைக்காட்சி பார்ப்பதும் மாணவர்களிடத்தில் பிறழ் நடத்தையை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. தொலைக்காட்சியில் வரும் கதாநாயகர்கள் போலத் தம்மைப் பாவனை செய்வது, அவர்களது மொழியை ஒத்து தமது மொழியை மாற்றிக் கொள்வது, தொலைக்காட்சியில் பார்க்கும் சம்பவங்களை நடைமுறை வாழ்வில் பின்பற்ற முயற்சிப்பது, வீட்டில் தொலைக்காட்சி பார்ப்பதால் பாடம் தொடர்பான வீட்டு வேலைகளைச் சரியாக நிறைவேற்றாமை, இரவில் அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் வகுப்பறையில் நித்திரை தூங்குவது, சோம்பேறித்தனமாக இயங்குவது போன்ற பல பிரச்சினைகள் காணப்படுவதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். வீட்டில் அல்லது நண்பர்கள் வீட்டிலேயே அதிகம் தொலைக் காட்சி பார்க்கின்றனர். எனினும் அதன் பாதிப்பினை வகுப்பறைக்குள் அவதானிக்க முடிகின்றது என்ற கருத்தையும் ஆசிரியர்கள் தெரிவித்தனர். மாணவர்கள் தொலைக் காட்சி பார்ப்பதால் வகுப்பறையில் ஏற்படும் பிறழ் நடத்தை சார்ந்த சவால்கள் பற்றிய வினாவுக்கு ஆசிரியர்களின் தெரிவு எவ்வாறு அமைந்திருந்தது என்பதை அட்டவணை 1 மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

அட்டவணை 1

| **தெரிவுகள்** | **எண்ணிக்கை** | **வீதம்** |
|---|---|---|
| மிக அதிகம் | 26 | 32% |
| அதிகம் | 22 | 27% |
| ஓரளவு | 19 | 24% |
| குறைவு | 11 | 14% |
| மிகக் குறைவு | 2 | 3% |

தொலைக்காட்சி பார்த்தல், அலைபேசிப் பாவனை போன்ற விடயங்களைக் கட்டுப்படுத்துவதில் பெற்றோரின் பங்கு முக்கியமானது. அன்றியும், வகுப்பறைகளில் மாணவர்கள் வெளிப்படுத்தும் பிறழ் நடத்தைகள் தொடர்பாக பெற்றாருடன் கலந்துரையாட வேண்டும் என்று ஆசிரியர்கள் விரும்புகின்றபோது அவர்கள் பாடசாலைக்கு வருகை தந்து ஆசிரியர்களோடு கலந்துரையாடி அவர்களின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள். இந்த நிலைமை எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பாக ஆசிரியர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்தில் இடம்பெற்ற தெரிவுகள் பற்றி வரைபு 4 காட்டுகின்றது.

வரைபு 4





இதன்படி பெற்றோரின் ஒத்துழைப்பு குறைவு, மிகக் குறைவு ஆகிய தெரிவுகளை மேற்கொண்டவர்களே அதிகம். குறிப்பாகக் பின்தங்கிய பிரதேச, கல்வியறிவு மிகக் குறைந்த குடும்பப் பின்னணியையுடைய பெற்றோர் பிள்ளைகளின் நடத்தை தொடர்பாக ஆசிரியர்களுடன் காட்டுகின்ற ஒத்துழைப்பு போதாதுள்ளது என்பதை கலந்துரையாடல் மூலம்் விளங்கிக் கொள்ள முடிந்தது. மாறாக இப்பின்னணியையுடைய பெற்றோர் சிலர் மிக ஒத்துழைப்போடு செயற்படுவதையும் காண முடிகின்றது.

வகுப்பறைகளில் பிறழ் நடத்தைகளை முகாமை செய்வதற்கு ஆசிரியர் ஒருவர் தனித்துச் செயற்படுவது வினைத்திறனுடையதாக அமையாது. அந்தவகையில் ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு செயற்படுத்துவது இலகுவானதாகும். ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புப் பற்றிக் கேட்கப்பட்ட வினாவுக்கான விடைத் தெரிவுகள் காணப்பட்டமையை பவரைபு 5 காட்டுகின்றது.

வரைபின்படி ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்பு போதாது என குறிப்பிட்ட ஆசிரியர்கள் கருதுகின்றனர். குறிப்பாக ஒரு பாட ஆசிரியர் வருகை தராதபோது அவருக்கு பதிலாக மற்றொரு ஆசிரியருக்குப் பணி வழங்கப்படுகின்றபோது அந்தப் பதிலாசிரியர்கள் அக்கறையோது நடந்துகொள்வதில்லை என கலந்துரையாடலின்போது அறிந்துகொள்ள முடிந்தது. அதேவேளை சில வகுப்பறைகளில் பதிலாசிரியருக்கு கடடுப்படாத மாணவர்கள் சிலர் உள்ளனர் என்பதையும் ஆசிரியர்கள் தெரியப்படுத்தினர்.

வரைபு 5




ஆசிரியர் சார்ந்து வகுப்பறைகளில் மாணவர்களது பிறழ்நடத்தைகளை முகாமை செய்வதில் காணப்படும் பின்வரும் மூன்று விடயங்கள் தொடர்பாக அவர்களது விடைத் தெரிவுகள் காணப்பட்டமை பற்றி அட்டவணை 2 காட்டுகின்றது.


அட்டவணை 2

| **காரணிகள்** | **மிக அதிகம்** | **அதிகம்** | **ஓரளவு** | **குறைவு** | **மிகக் குறைவு** | **இடை** |
|---|---|---|---|---|---|---|
| மாணவர்களிடையே பாகுபாடு காட்டல் | 11 | 22 | 23 | 12 | 12 | 3.1 |
| எதிர் காலச் சிக்கல் காரணமாகத் தவிர்த்தல் | 16 | 12 | 24 | 22 | 6 | 3.13 |
| பணிச்சுமை | 14 | 21 | 19 | 14 | 12 | 3.14 |

இங்கு ஆசிரியர்கள் மாணவர்களிடையே பாகுபாடு காட்டல் என்பதன் இடை 3ஐ விடக் குறைவாக உள்ளமையால் இக்காரணி வலுவற்றதாக அமைகின்றது. ஆனால் ஏனைய இரண்டு விடயங்களின் இடையும் 3ஐ அதிகமாக உள்ளமையால் வலிமையுடையவையாக அமைந்துள்ளன.

பாடசாலை முகாமைத்துவத்தின் ஒத்துழைப்பும் வகுப்பறைகளில் மாணவர்களின் பிறழ் நடத்தைகளை ஆசிரியர்கள் முகாமை செய்வதில் முக்கியமான விடயமாக அமைகின்றது. பாடசாலை முகாமைத்துவத்தின் ஒத்துழைப்புப் பற்றிய வினாவுக்கான தெரிவுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை வரைபு 6 காட்டுகின்றது.

வரைபு 6



57% ஆனவர்கள் இந்த விடயத்தில் முகாமைத்துவத்தின் ஒத்துழைப்புப் போதாது என்ற கருத்தைக் கொண்டிருந்தனர் என்பது வெளிப்படையாகின்றது. இந்நிலையில் முகாமைத்துவத்தின் ஒத்துழைப்பு உயர் மட்டத்தில் இருக்குமானால் மாணவர்களின் பிறழ் நடத்தைகளை முகாமை செய்வது ஒப்பீட்டளவில் இலகுவானதாக அமையும்.

பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள், வாய்ப்புக்கள், வசதிகள் என்பனவும் மாணவர்களின் பிறழ் நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்து விடும். அந்தவகையில் ஆசிரியர்களிடம் வினாக்கொத்து மூலம் மாணவர்களுக்கான நலனோம்பு செயற்பாடுகள், சம சந்தர்ப்பம் வழங்கல், ஒழுக்க விழுமியம் பற்றி போதனை ஆகியவைபற்றித் தகவல்கள் திரட்டப்பட்டன. அவைபற்றிய பகுப்பாய்வினை அட்டவணை 3 மூலம் விளங்கிக்கொள்ளலாம்.


அட்டவணை 3

| **காரணிகள்** | **மிக அதிகம்** | **அதிகம்** | **ஓரளவு** | **குறைவு** | **மிகக் குறைவு** | **இடை** |
|---|---|---|---|---|---|---|
| நலனோம்பு செயற்பாடுகள் | 9 | 17 | 35 | 8 | 11 | 2.85 |
| சமசந்தர்ப்பம் வழங்கல் | 3 | 7 | 26 | 28 | 16 | 2.41 |
| ஒழுக்க விழுமியம் பற்றிய போதனை | 3 | 11 | 14 | 28 | 24 | 2.26 |

இவற்றின் இடை 3ஐ விடக் குறைவாக உள்ளமையால் மேற்படி செயற்பாடுகள் பாடசாலைகளில் தாழ்நிலையில் உள்ளமையை அறிய முடிகின்றது. இவை மேம்படுத்தப்பட்டால் மாணவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டு அவர்கள் பிறழ் நடத்தைகள் வெளிப்படுத்துவது குறைவடையும். அதன் மூலம் ஆசிரியர்கள் வகுப்பறைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனுடைய வகையில் முன்னெடுக்க முடியும்.

மாணவர்களின் ஈடுபாட்டைப் பயனுள்ள வகையில் மாற்றியமைத்து அவர்கள் பங்குபற்றுவதற்கும் தமது ஆற்றலை வெளிப்படுத்துவதற்குமான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கப்பட்டால் அவர்கள் பிறழ் நடத்தைகளை வெளிப்படுத்துவது குறைவாகக் காணப்படும். இதற்கு இணைபாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவது சிறந்த வழியாகும். மேற்படி ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் இணைபாடவிதானச் செயற்பாடுகள் எந்தளவில் முன்னெடுக்கப்படுகின்றன என்பது தொடர்பாக அறியும் நோக்குடன் ஆசிரியர்களிடம் வினாக்கொத்து மூலம் வினாவப்பட்டதற்கு அவர்களது தெரிவுகள் எவ்வாறு காணப்பட்டன என்பதை வரைபு 7 காட்டுகின்றது.

வரைபு 7




**கண்டறிதல்களும் பரிந்துரைகளும்**

- இடைநிலை பிரிவில் 9 – 11 வரையிலான வகுப்புக்களில் ஒப்பீட்டளவில் பிறழ் நடத்தைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.
- ஆசிரியர் அப்பிறழ் நடத்தைகளை முகாமை செய்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர்.
- அவர்களின் பிறழ் நடத்தைகளில் சகபாடிகளின் செல்வாக்கு அதிகமாக உள்ளது.
- ஒப்பீட்டளவில் பெண்பிள்ளைகளைக் காட்டிலும் ஆண்பிள்ளைகள் அதிகமாகப் பிறழ்நடத்தைகளை வெளிப்படுத்துகின்றனர்.
- ஆண்பிள்ளைகள் வெளிப்படுத்தும் பிறழ் நடத்தைகள் சார்பளவில் தாக்கம் அதிகமானவையாகக் காணப்படுவதோடு அவற்றை முகாமைசெய்வதும் சவால்நிறைந்ததாக உள்ளது.
- பிள்ளைகளின் குடும்பப் பின்னணி அவர்களின் பிறழ் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது.
- பிறழ் நடத்தைகளையுடைய சமூகச் சூழலிலிருந்து வரும் பிள்ளைகள் வகுப்பறைகளிலும் அதிக பிறழ் நடத்தைகளை வெளிப்படுத்துகின்றனர்.
- பிறழ் நடத்தைகளை முகாமை செய்வதற்காகத் தண்டனைகளை வழங்குவது தமக்கு ஆபத்தானது என ஆசிரியர்கள் கருதுகின்றனர்.
- வகுப்பறைப் பிறழ் நடத்தைகளை முகாமை செய்வதில் பாடசாலையின் வழிகாட்டலும் ஆலோசனையும் பகுதியின் சேவை போதுமானவையாக இல்லை.
- பிறழ் நடத்தைகளை வெளிப்படுத்தும்போது ஆசிரியர்கள் சுடுசொற்களைப் பயன்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்த முற்படுகின்றனர்.
- சொல்சார்ந்த பிறழ் நடத்தைகளே அதிகமாக வெளிப்படுத்தப்படுகின்றன. எனினும் ஆண் பிள்ளைகள் வன்நடத்தைகள் சார்ந்த பிறழ்வுகளையும் வெளிப்படுத்துகின்றனர்.
- பொதுவாக, பிறரது கவனத்தைத் தம்பக்கம் ஈர்த்தல், தமது வலுவை வெளிப்படுத்தல், பழிவாங்கல், பின்வாங்கல் மூலம் தப்பித்துக்கொள்ளல் ஆகிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இவ்வாறான பிறழ் நடத்தைகளல் ஈடுபடுகின்றனர்.
- மாணவர்கள் கூட்டாகச் சேர்ந்தே அதிக பிறழ் நடத்தைகளில் ஈடுபடுகின்றனர்.

- பிறழ் நடத்தைகளை முகாமை செய்வதில் பாடசாலைச் சமூகம் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

**பரிந்துரைகள்**

- பிறழ்நடத்தைகளை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் காலதாமதமின்றிச் (early prevention) செயற்படவேண்டும்.
- பெற்றோர், சக ஆசிரியர்களின் ஆதரவோடு அவற்றை முகாமைசெய்வது இலகுவானது.
- பிறழ் நடத்தைகளை முகாமை செய்வதில் தண்டனை வழங்குதல் ஆசிரியர், மாணவராகிய இருசாராருக்கும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.
- பிறழ் நடத்தைகளை வெளிப்படுத்தும் மாணவர்களைத் தவிர்த்தல் அல்லது ஒதுக்குதல் பொருத்தமான முகாமைத்துவச் செயற்பாடாக அமையாது.
- அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள், வழிகாட்டல்களை உரியமுறையில் வழங்க வேண்டும்.
- வகுப்பறையிலும் பாடசாலையிலும் பிள்ளைகளுக்குரிய அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் பிறழ் நடத்தைகளில் ஈடுபடுவதை கணிசமான அளவு தவிர்த்துக்கொள்ளலாம்.
- பிள்ளைகளின் சமூகத் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்துகொள்வதன் மூலம் முரண்பாடற்றவகையில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம்.
- பிள்ளைகள் பிறழ் நடத்தைகளை வெளிப்படுத்தும்போது ஆசிரியர்கள் நிதானமாகச் செயற்பட வேண்டும்.
- மாணவர்களின் தனித்துவமான இயல்புகளுக்கு ஏற்ப பொருத்தமான வழிறைகளைக் கையாண்டு அவர்களது பிறழ் நடத்தைகளை முகாமை செய்ய வேண்டும்.

**முடிவுரை**

இன்று பாடசாலைகளில் கற்கும் மாணவர்களிடையே பிறழ்நடத்தைகள் அதிகரித்து வருவதாகப் பலரும் ஆதங்கப்படுகின்றனர். சமூக, அரசியல் , பொருளாதார கட்டமைப்புக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப, தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி எனப் பல காரணிகள் அவர்களது பிறழ்நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மாணவர் சார்ந்த விடயங்கள் மட்டுமின்றி பாசாலை, பெற்றோர், சமூகம் என பலதரப்பட்ட விடயங்கள் இப்பிறழ் நடத்தைகளுக்குப் பின்னணியாக அமைகின்றன. இந்நிலையில் ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களை கட்டுப்படுத்தி அவர்களின் கவனத்தைக் கல்வியில் குவிக்க வேண்டிய தேவையுடையவர்களாக உள்ளனர். பெற்றோர், சமூகம் எதிர்பார்க்கின்ற பிள்ளைகளை உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நிலையில் ஆசிரியர்கள் ஏனைய தரப்பினர்களது உதவியோடு மாணவர்களது பிறழ்நடத்தைகளை முகாமை செய்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலம் ஆரோக்கியமான எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

**உசாத்துணைகள்**

1. கருணாநிதி, மா. (2008). ***கற்றல் கற்பித்தல் மேம்பாட்டு வழிமுறைகள்.*** கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

2. சந்திரசேகரம், சோ. (2008). ***சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள்.*** கொழும்பு: சேமமடு பதிப்பகம்.
3. சந்திரசேகரம், சோ. (2009). ***சமகாலக் கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு.*** கொழும்பு: சேமமடு பதிப்பகம்.
4. சின்னத்தம்பி, மா. (2015). ***சமுதாய மாற்றமும் பாடசாலைகளும்.*** யாழ்ப்பாணம்: MS Edspring.
5. பக்கீர் ஜ.்.பார், ப.கா. (2009). ***மாணவர்களின் வகுப்பறை நடத்தை.*** கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
6. ஜெயராசா, ச. (2008). ***ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்***. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.